بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 24/06/2022 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

## ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு - தொடர் 23 அன்னாரின் காலத்தில் அனுப்பப்பட்ட போர்ப்படைகள் பற்றிய ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய சம்பவங்கள்

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களுடைய காலத்தில் அனுப்பப்பட்ட போர்ப்படைகள் பற்றிக் கூறப்பட்டு வந்தது. **ஏழாவது போர்ப்படைக்காக, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் காலித் பின் ஸயீத் பின் ஆஸ் (ரலி) அவர்களுக்காகக் கொடியைக் கட்டினார்கள்.** அவர்களை சிரியாவின் எல்லைப் புற பகுதியான ஹம்கத்தைனுக்கு அனுப்பினார்கள். ஹஸ்ரத் காலித் பின் ஸயீத் பின் ஆஸ் (ரலி) அவர்களின் பெயர் காலித்; புனைப் பெயர் அபூ ஸயீத் ஆகும். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் முற்றிலும் ஆரம்பத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களில் ஒருவராக இருந்தார்கள்.

இவர்கள் **இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட சம்பவம்** இவ்வாறாகும்: இவர்கள் நெருப்பின் விளிம்பில் நிற்பதாகவும் இவர்களின் தந்தை இவர்களை அதில் விழ வைப்பதற்கு முயற்சி செய்வதாகவும் கனவில் கண்டார்கள். இவர்கள் நெருப்பில் விழுந்து விடாமாலிருப்பதற்காக, இவர்களது இடுப்பை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிடித்திருப்பதாகவும் கண்டார்கள். இதனால், பதற்றமடைந்த ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் விழித்துக் கொண்டார்கள். மேலும், 'அல்லாஹ்வின் மீதாணையாக! இந்தக் கனவு உண்மையானது' என்று கூறினார்கள். எனவே, ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன் ஆஜராகி, 'ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களே! தாங்கள் எதன் பால் அழைக்கிறீர்கள்?' எனக் கேட்டார்கள்.

அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், 'தனித்தவனான, தனக்கு எவரும் ஈடு இணையில்லாத, அந்த இறைவன் பால் அழைக்கிறேன். முஹம்மது (ஸல்) அவனது அடியாரும் தூதரும் ஆவார். செவிமடுக்காத, பார்க்காத, இழப்பு ஏற்படுத்தவும் முடியாத, பலனை எட்ட வைக்கவும் முடியாத அந்தக் கற்களை வணங்குவதை நீங்கள் விட்டு விடுங்கள். யார் அவற்றை வணங்குகிறார்; யார் வணங்குவதில்லை என்பது அவைகளுக்குத் தெரியாது (ஆகியவற்றின் பால் அழைக்கிறேன்).' என்று கூறினார்கள்.

இதைக் கேட்ட ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள், ‘அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவர் வேறு யாரும் இல்லை என்றும், தாங்கள் அல்லாஹ்வின் தூதர் ஆவீர்கள் என்றும் நான் சாட்சி பகர்கிறேன்’ என்று கூறினார்கள்.

**முஸ்லிம்கள் இரண்டாவது முறை அபீஸீனியாவுக்கு ஹிஜ்ரத் செய்த போது, ஹஸ்ரத் காலித் பின் ஸயீத் பின் ஆஸ் (ரலி) அவர்களும் அவர்களுடன் சென்று விட்டார்கள்.** இவர்கள் கைபர் போரில் கலந்து கொள்ளவில்லை. ஆனால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் போர்ச் செல்வத்திலிருந்து இவர்களுக்கும் பங்கு வழங்கினார்கள். இதற்குப் பிறகு, மக்கா வெற்றி, ஹுனைன் போர், தாயிஃப் போர் மற்றும் தபூக் போர் முதலிய அனைத்துப் போர்களிலும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் இருந்தார்கள். இவர்களால் பத்ர் யுத்தத்தில் கலந்து கொள்ள முடியவில்லை. இந்த இழப்பை நினைத்து எப்போதும் வருத்தப்பட்டு வந்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், ‘அல்லாஹ்வின் தூதர் அவர்களே! எங்களால் தங்களுடன் பத்ர் யுத்தத்தில் கலந்து கொள்ள முடியவில்லை’ என்று பணிவுடன் கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ‘மக்களுக்கு ஒரு ஹிஜ்ரத் செய்யும் கண்ணியம் கிடைத்து, உங்களுக்கு இரு ஹிஜ்ரத் செய்யும் கண்ணியம் கிடைத்திருப்பது உங்களுக்குப் பிடித்தமானதாக இருக்கவில்லையா?’ என்று கேட்டார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் முர்தத்களைத் தண்டிப்பதற்காகக் கொடிகளைக் கட்டிய போது, ஹஸ்ரத் காலித் பின் ஸயீத் பின் ஆஸ் (ரலி) அவர்களுக்காகவும் ஒரு கொடியைக் கட்டினார்கள். அவர்களுக்கு ‘தீமா’ செல்லுமாறு கட்டளையிட்டார்கள். மேலும், ‘உங்கள் இடத்தை விட்டு நகராதீர்கள். அக்கம் பக்கத்திலுள்ள மக்களுக்கு உங்களுடன் இணைந்து கொள்ள அழைப்பு விடுங்கள். முர்தத் ஆகாதவர்களை ஏற்றுக் கொள்ளுங்கள். உங்களுடன் சண்டையிடுபவர்களைத் தவிர வேறு யாரோடும் சண்டையிடாதீர்கள். என்னுடைய கட்டளைகள் வரும் வரை இவ்வாறே செய்து வாருங்கள்’ என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் தீமாவில் தங்கினார்கள். அக்கம் பக்கத்தில் இருந்த பல கூட்டங்கள் அவர்களுடன் வந்து இணைந்து கொண்டன. முஸ்லிம்களின் இந்த மகத்துவமிக்க படையைப் பற்றிய தகவல் ரோமானியார்களுக்குக் கிடைத்த போது, அவர்கள் தம் தாக்கத்தின் கீழ் இருந்த அரேபியர்களிடம் சிரியா போருக்காகப் படைகளைக் கோரினர். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் ரோமானியார்களின் ஆயத்தத்தைப் பற்றியும் அரபு கோத்திரங்களின் வருகையைப் பற்றியும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்குத் தெரியப்படுத்தினார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இவ்வாறு பதில் எழுதினார்கள்: நீங்கள் முன்னோக்கிச் செல்லுங்கள். சிறுதும் பதற்றமடையாதீர்கள். அல்லாஹ்விடம் உதவி கோருங்கள். இந்த பதில் கிடைத்ததுமே ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் பகைவர்களை நோக்கி விரைந்தார்கள். அருகில் சென்றதும் எதிரி மீது எத்தகைய ஒரு திகில் ஏற்பட்டது என்றால், எல்லாரும் தத்தமது இடத்தை விட்டு ஓடி விட்டனர். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் எதிரியின் இடத்தைக் கைப்பற்றி விட்டார்கள். இந்த வெற்றியைப் பற்றிய தகவலை ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்குத் தெரியப்படுத்தினார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் காலத்தில், முர்தத்களுக்கு எதிராக ஹஸ்ரத் காலித் பின் ஸயீத் (ரலி) அவர்களின் செயல்பாடுகளைப் பற்றி, இந்த அளவே வரலாற்றிலிருந்து தெரிய வருகிறது.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* கிளர்ச்சியாளர்களான முர்தத்களுக்கு எதிரான **எட்டாவது போர்ப்படை, ஹஸ்ரத் துரைஃபா பின் ஹாஜிஸ் அவர்களுடையதாகும்.** ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் துரைஃபா பின் ஹாஜிஸ் அவர்களுக்காக ஒரு கொடியைக் கட்டினார்கள். அவர்களுக்கு பனூ ஸுலைம் மற்றும் பனூ ஹவாஸனை எதிர்கொள்ளுமாறு கட்டளையிட்டார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கலீஃபா ஆன பிறகு, ஹஸ்ரத் துரைஃபா பின் ஹாஜிஸ் அவர்களை ஸுலைமில், இஸ்லாத்தில் நிலைந்திருந்த அரேபியர்களுக்கு ஆளுநராக நியமித்தார்கள். இவர்கள் கலப்பற்ற மற்றும் உத்வேகமுடைய ஊழியராகத் திகழ்ந்தார்கள். இவர்கள் எத்தகைய தாக்கம் ஏற்படுத்தும் சொற்பொழிவுகளை ஆற்றினார்கள் என்றால், பனூ ஸுலைமின் பல அரேபியர்கள் இவர்களுடன் வந்து இணைந்து கொண்டார்கள். **ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அபீ பக்ர் அவர்கள் அறிவிக்கிறார்கள்:**

பனூ ஸுலைமைச் சேர்ந்த ஃபுஜா என்பவன் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் வந்தான். அவன், 'நான் முஸ்லிம் ஆவேன். முர்தத் ஆகிவிட்ட மக்களுக்கு எதிராகப் போர் புரிய விரும்புகிறேன். தாங்கள் எனக்குப் பயண விலங்குகளை வழங்கி எனக்கு உதவிடுங்கள்' என்று கூறினான்.ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அவனுக்குப் பயண விலங்குகளை வழங்கினார்கள். ஆயுதங்களை வழங்கினார்கள். மேலும், ஆயுதங்களைக் கொண்ட பத்து முஸ்லிம்களை அவனுடன் அனுப்பி வைத்து விட்டார்கள்.

ஃபுஜா தனது கோத்திரத்தை நோக்கிச் சென்றான். வழியில், முர்தத் ஆன அரேபியர்களைத் தன்னுடன் இணைத்துக் கொண்டே வந்தான். அவனது கூட்டம் பெரிதானதும், முதலில் அவன் தன்னுடன் இருந்த முஸ்லிம்களைக் கொன்று அவர்களது செல்வங்களை எல்லாம் சூறையாடினான். பிறகு பேரழிவு ஏற்படுத்த ஆரம்பித்து விட்டான். சில வேளை ஒரு கோத்திரத்தின் மீதும், சில வேளை வேறு கோத்திரத்தின் மீதும் என திடீர் தாக்குதல் தொடுத்து வந்தான்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு இதைப் பற்றி தெரிய வந்த போது, அன்னார் ஹஸ்ரத் துரைஃபா பின் ஹாஜிஸ் (ரலி) அவர்களுக்கு இவ்வாறு எழுதினார்கள்: நீங்கள் உங்களுடன் இருக்கும் முஸ்லிம்களை உடன் அழைத்துச் செல்லுங்கள். ஒன்று, அவனைக் கொன்று விடுங்கள். அல்லது சிறைபிடித்து என்னிடம் அனுப்பி விடுங்கள். ஹஸ்ரத் துரைஃபா பின் ஹாஜிஸ் (ரலி) அவர்கள் அவனை எதிர்கொள்ளச் சென்றார்கள்.

இரண்டு குழுக்களும் ஒன்றோடொன்று மோதின. ஹஸ்ரத் துரைஃபா அவர்கள் ஃபுஜாவை கைது செய்து ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் முன் நிறுத்தினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் துரைஃபா அவர்களுக்கு, 'அவனை 'பகீஃ' கொண்டு சென்று, நெருப்பில் எரித்து விடுங்கள்' என்று கட்டளையிட்டார்கள். அவன் முஸ்லிம்களோடு இப்படித்தான் நடந்து கொண்டிருந்தான் என்பதால், அவனுடன் இவ்வாறு நடந்து கொள்ளப்பட்டது.

கிளர்ச்சியாளர்களான முர்தத்களுக்கு எதிரான **ஒன்பதாவது போர்ப்படை, ஹஸ்ரத் அலா பின் ஹஸ்ரமீ (ரலி) அவர்களுடையதாகும்.** ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி)

அவர்கள் ஹஸ்ரத் அலா பின் ஹஸ்ரமீ (ரலி) அவர்களுக்கு ஒரு கொடியை வழங்கி, பஹ்ரைனுக்கு செல்லுமாறு ஆணையிட்டார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அரசர்களுக்கு தப்லீஃக் கடிதங்கள் எழுதிய போது, பஹ்ரைனின் ஆட்சியாளன் முன்ஸிர் பின் ஸாவாவிடம் கடிதம் கொண்டு செல்வதற்கான தொண்டு ஹஸ்ரத் அலா பின் ஹஸ்ரமீ (ரலி) அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இதற்குப் பிறகு, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவர்களை பஹ்ரைனின் ஆளுநராக நியமித்து விட்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வஃபாத் வரை, ஹஸ்ரத் அலா (ரலி) அவர்கள் பஹ்ரைனின் ஆளுநராக இருந்தார்கள். பிறகு, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்திலும் இதே பொறுப்பில் நிலைபெற்றிருந்தார்கள்.

பஹ்ரைனின் நிலைமைகள் பற்றி இவ்வாறு வருகிறது: 'பஹ்ரைன்' ஹைரா அரசர்களின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்தது. ஹைரா அரசர்கள் கிஸ்ரா அரசர்களுக்குக் கீழ் இருந்தனர். பஹ்ரைனின் கரையோர நகரங்களிலும் வியாபார நகரங்களிலும் பல இன மக்கள் கலந்து வாழ்ந்து வந்தனர். பஹ்ரைனின் பகுதியான ஹிஜ்ரைச் சேர்ந்த பாரஸீகர்களும் கிறிஸ்தவர்களும் யூதர்களும் சிறிதும் மனமில்லாமல், ஜிஸ்யா வரி செலுத்த சம்மதித்திருந்தார்கள். பஹ்ரைனின் மற்ற ஊர்களிலும் நகரங்களிலும் முஸ்லிம் அல்லாதவர்கள் வசித்து வந்தனர். இந்த மக்கள் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம், அவ்வப்போது கிளர்ச்சி செய்து வந்தனர். **ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வஃபாத்திற்குப் பிறகு, அப்துல் கைஸ் கோத்திரம் உறுதியாக நிலை நின்றது.** முர்தத் ஆகுதல் எனும் கொடிய நோய் அவர்களை வந்தடையவில்லை. மற்ற அரேபியர்கள், அரேபியர் அல்லாதவர்கள் என அனைவரும் மதீனாவின் ஆளுமை பலத்தை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டார்கள்.

ஈரானிய அரசு அவர்களை ஊக்குவித்தது. கிளர்ச்சியின் தலைமை பொறுப்பை ஒரு பெரிய அரபு தலைவன் முன்ஸிர் பின் நுஃமானிடன் ஒப்படைத்து விட்டது. கிஸ்ரா முன்ஸிர் பின் நுஃமானுக்குப் பொன்னாடை போர்த்தி, மகுடம் சூட்டினான். நூறு குதிரை வீரர்களையும், மேற்கொண்டு ஏழாயிரம் சிப்பாய்களையும் சவாரிகளையும் கொடுத்தான். பக்ர் பின் வாயில் கோத்திரத்துடன், பஹ்ரைன் செல்லுமாறு அவனுக்குக் கட்டளையிட்டான். எல்லாவற்றிற்கும் முதலாக, அவர்கள் அப்துல் கைஸ் கேத்திரத்தை இஸ்லாத்தைக் கைவிடச் செய்ய முயற்சி செய்தனர். ஆனால், தோற்றுப் போயினர். எனவே, ஆற்றலின் வலுவால் அவர்களை ஆதிக்கத்தில் கொண்டு வர நினைத்தனர்.

அப்துல் கைஸ் கேத்திரத்து மக்கள் தமது தோழர்களுடனும் அடிமைகளுடனும், நாலாயிரம் பேராகத் தமது தலைவரான ஹஸ்ரத் ஜாரூத் பின் முஅல்லா அவர்களிடம் ஒன்று கூடினர். பக்ர் பின் வாயில் கோத்திரம் தனது ஒன்பதாயிரம் ஈரானியர்கள் மற்றும் மூவாயிரம் அரேபியர்களுடன் அவர்களை நெருங்கியது. பிறகு, இரு சாராருக்கும் இடையில் பயங்கரமான போர் நடை பெற்றது. பக்ர் பின் வாயில் கோத்திரம் பெரும் இழப்பை சந்திக்க நேரிட்டது. பிறகு, அவர்கள் இரண்டாவது முறை கடுமையாக சண்டையிட்டார்கள். இம்முறை அப்துல் கைஸ் கேத்திரம் பெரும் இழப்பை சந்திக்க நேரிட்டது. இவ்வாறே, அவர்கள் ஒருவர் மற்றவரைப் பழிவாங்கிக் கொண்டே இருந்தார்கள். அவர்களுக்கு மத்தியில் பல நாள்கள் வரை போர் தொடர்ந்து வந்தது.

எதுவரை என்றால், பல மக்கள் கொல்லப்பட்டனர். அப்துல் கைஸ் கோத்திரத்து பொது மக்கள், பக்ர் பின் வாயிலிடம் அமைதியை வழங்க கோரிக்கை வைத்தனர். அப்துல் கைஸ் கோத்திரத்தினர், தற்போது தாம், பக்ர் பின் வாயிலுக்கு எதிராக எந்த ஆற்றலையும் கொண்டிருக்கவில்லை என்பதை அறிந்து கொண்டார்கள். ஆக, அவர்கள் தோல்வியைத் தழுவினார்கள். எதுவரை என்றால், ஹிஜ்ர் மண்ணில் ஜவாஸா என்ற தமது கோட்டைக்குள் அடைபட்டு இருந்து விட்டனர். பக்ர் பின் வாயில் கோத்திரத்தினர் தமது ஈரானிய மக்களுடன் இணைந்து முன்னோக்கிச் சென்றனர். அவர்களின் கோட்டை வரை சென்று அடைந்து, அவர்களைச் சுற்றி வளைத்து விட்டனர். அவர்களுக்குச் செல்லும் உணவைத் தடை செய்து விட்டனர்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு அப்துல் கைஸ் பற்றித் தெரிய வந்த போது, அன்னாருக்குக் கடுமையான வேதனை ஏற்பட்டது. அன்னார் ஹஸ்ரத் அலா பின் ஹஸ்ரமீ அவர்களை வரவழைத்து, படையின் தலைமையை அவர்களிடம் ஒப்படைத்து விட்டார்கள். ஈராயிரம் முஹாஜிர்கள் மற்றும் அன்ஸாரிகளுடன் அப்துல் கைஸுக்கு உதவுதற்காக பஹ்ரைனுக்குப் புறப்படுமாறு கட்டளையிட்டார்கள்.

மேலும், “அரேபிய கோத்திரங்களில், எந்தக் கோத்திரத்தைத் தாண்டிச் சென்றாலும் அவர்களுக்கு பனூ பக்ர் பின் வாயிலுடன் போர் புரியுமாறு எழுச்சியூட்டுங்கள். ஏனென்றால், அவர்கள் ஈரானின் பேரரசன் கிஸ்ராவால் நியமிக்கபட்ட முன்ஸிர் பின் நுஃமானுடன் வந்துள்ளனர். அவன், அதாவது, அந்த அரசன் அவனது தலையில் கிரீடத்தை வைத்தான். மேலும், அல்லாஹ்வின் ஒளியை அணைக்க எண்ணினான். இறைநேசர்களைக் கொன்றான். எனவே, நீங்கள் ‘லா ஹவ்ல வ லா குவ்வத்த இல்லா பில்லாஹ்’ என்று கூறியவாறு புறப்பட்டு விடுங்கள்” என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அலா பின் ஹஸ்ரமீ அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கட்டளையை அமல் படுத்திய வண்ணம் புறப்பட்டு விட்டார்கள்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* மீதம் இருக்கும் பகுதி இனி வரும் காலங்களில் எடுத்துரைக்கப்படும். இன் ஷா அல்லாஹ்!

اَلْحَمْدُ لِلّٰہِ نَحْمَدُہٗ وَنَسْتَعِیْنُہٗ وَنَسْتَغْفِرُہٗ وَنُؤْمِنُ بِہٖ وَنَتَوَکَّلُ عَلَیْہِ وَنَعُوْذُ بِاللّٰہِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَیِّئَاتِ اَعْمَالِنَا مَنْ یَّھْدِہِ اللّٰہُ فَلَا مُضِلَّ لَہٗ وَمَنْ یُّضْلِلْہُ فَلَا ھَادِیَ لَہٗ وَنَشْھَدُ اَنْ لَّا اِلٰہَ اِلَّا اللّٰہُ وَنَشْھَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُہٗ وَرَسُوْلُہٗ، عِبَادَ اللّٰہِ رَحِمَکُمُ اللّٰہِ اِنَّ اللّٰہَ یَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِیْتَآءِ ذِی الْقُرْبٰی وَیَنْھٰی عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْکَرِ وَالْبَغْیِ یَعِظُکُمْ لَعَلَّکُمْ تَذَکَّرُوْنَ اُذْکُرُوا اللّٰہَ یَذْکُرْکُمْ وَادْعُوْہُ یَسْتَجِبْ لَکُمْ وَلَذِکْرُ اللّٰہِ اَکْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)